முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.12.2024) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான கிறித்தவ தேவாலயங்கள், இஸ்லாமிய பள்ளிவாசல்கள், தர்காக்களை புனரமைத்தல், பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ள அரசு நிதி உதவி அளித்தல் மற்றும் கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டம் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்களுக்கு புதிதாகச் சுற்றுச்சுவர், பாதை அமைத்தல், புனரமைத்தல் பணிகளை மேற்கொள்ள அரசு நிதி உதவி வழங்கும் திட்டங்களின் கீழ் 3 கோடியே 61 இலட்சத்து 82 ஆயிரத்து 208 ரூபாய்க்கான காசோலைகளை தேவாலயங்கள் மற்றும் தர்காக்களின் நிர்வாகிகளிடம் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் எஸ்.எம். நாசர், நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மரு. தாரேஸ் அஹமத், முனைவர் சீ.சுரேஷ் குமார், திருமதி. மு. ஆசியா மரியம், ஜோ. அருண், சி. பெர்னான்டஸ் ரத்தின ராஜா, கிறித்தவ தேவலாயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவர் திருமதி விஜிலா சத்தியானந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (13.12.2024) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் புதுதில்லியில் நடைபெற்ற மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தின் விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்து விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன். கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந. சுப்பையன் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

இயற்கைச் சீற்றங்களுக்கான உரிய நிவாரணத் தொகையைத் தராமல்

தமிழ்நாட்டை ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்சிக்கிறது!

மக்களவையில் – நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி பேச்சு!

புதுடெல்லி,டிச.14–

***தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் கல் நெஞ்ச ஒன்றிய அரசுக்கு தக்க பாடம் சொல்லித் தரப்படும்!" என்றும் பேரிடர் மேலாண்மை சட்ட திருத்த மசோதாவை எதிர்த்துப் பேசி அது தொடர்பாக நடந்த விவாதத்தில் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி புள்ளி விவரங்களுடன் பேசினார்.**

நாடாளுமன்ற மக்களவையில் பேரிடர் மேலாண்மை சட்டத்தில் திருத்தம் கொண்டு வரும் மசோதா மீதான விவாதம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி. இயற்கைசீற்றங்களுக்குஉரிய நிவாரணத் தொகையை தமிழ்நாட்டுக்குத் தராமல் ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்சிப்பதை குறிப்பிட்டு பேசினார்.

இந்த விவாதத்தில் கனிமொழி கருணாநிதி பேசியதாவது:-

"நான் இந்த மசோதாவை எதிர்க்கிறேன்.

பருவநிலைமாற்றம் பல்வேறு இயற்கை சீற்றங்களை அதிகப்படுத்தியுள்ளது. புயல், மழை, வெள்ளம், காட்டுத் தீ போன்ற பிரச்சினைகளால் உயிர்களும் உடைமைகளும் பாதிக்கப்படுகின்றன. மக்கள் அதிகமாக இடம் பெயர வேண்டியுள்ளது.

பருவநிலைமாற்றத்தின் பாதிப்பை நாம் முழுமையாக புரிந்துகொண்டது போல தெரியவில்லை. ஏனென்றால், உலகம் முழுதிலும் வெள்ளம், காட்டுத் தீ, வறட்சி ஆகியவை முன்புஎப்போதும் இல்லாததைவிட அதிகமாகியுள்ளது. எந்த நாடும் இதற்கு முன்பு பார்த்திராத பாதிப்புகளை இப்போது சந்தித்து வருகிறது.

இந்தியாவிலே ஒவ்வொரு நாளும் பல மாநிலங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன, நிலச்சரிவு ஏற்படுகிறது. இப்போது நாம் இந்த பேரிடர் மேலாண்மை என்பதை இன்னும்தீவிரமானபிரச்சினையாகபார்க்க வேண்டும்.

ஒன்றிய அரசு போதுமான முன்னெச்சரிக்கை தருவதில்லை!

ஒவ்வொருமுறைபுயல், வெள்ளம்வரும் போதும் நாங்கள் முன்னெச்சரிக்கை செய்து விட்டோம் என்று ஒன்றிய அரசு பெருமையாக சொல்லிக் கொள்கிறீர்கள். ஆனால் ஒன்றிய அரசால் போதுமான முன்னெச்சரிக்கை வழங்கப்படுவதில்லை. முன்கூட்டியே எச்சரிக்கும் தொழில் நுட்பங்கள் இல்லை.

உங்களுடைய தகவல் எப்படி உள்ளது என்றால் ஜோதிடம் பார்ப்பது போலத்தான் உள்ளது. 150 கிலோ மீட்டர் தூரத்தில் புயல் இருக்கும்போதுதான்உங்களால்தெளிவான எச்சரிக்கைகளை வழங்க முடிகிறது. இதை நடைமுறையில்ஒருநாளுக்குமுந்தையஎச்சரிக்கை என்றுதான் கொள்ள வேண்டும். இந்த அவகாசத்தில் எத்தனை மக்களை ஒரு இடத்தில்இருந்துஇன்னொருஇடத்துக்குபாதுகாப்பாக அழைத்துச் செல்ல முடியும்? ஒரே நாளில்மாநிலஅரசுகளால்என்னசெய்யமுடியும்?

பலநாடுகள்புயல்களை300கிலோமீட்டர் தூரத்தில்உருவாகும்போதேகண்டறியமுடிகிறது. அதன் மூலம் 3 நாட்களுக்கு முன்பே மக்களை எச்சரிக்க முடிகிறது. நமது ரேடார் அமைப்புகளைமேம்படுத்திஒன்றியஅரசால் 3 நாட்களுக்கு முன்பே மாநில அரசுகளுக்கு எச்சரிக்கைகளை வழங்க முடிந்தால்... அது மிகப்பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல முடியும். பல உடைமைகளை பாதுகாக்க முடியும்.

செயற்கைக் கோள் மூலமாகவும் செயற்கைநுண்ணறிவுமூலமாகவும்ஆய்வு செய்யும்போது அவை பருவ நிலை மாற்றம் பற்றிய தெளிவான படங்களை வழங்கும்.

நாங்கள் விஸ்வகுரு, உலகுக்கே நாம் தான் ஆசிரியர்கள் என்று சொல்லிக் கொள்கிறீர்கள். ஆனால் நாம் உலகுக்கு முன்னணியாக இருக்க வேண்டுமென்றால், இந்த பேரிடர் மேலாண்மையிலும் நாம் முன்னணியில்இருக்கவேண்டும். ஆனால்ஒன்றிய அரசு அதுபற்றி கவலைப்படுவது போல் தெரியவில்லை.

விவசாயிகளின் உரிமை பறிப்பு!

பெரும்பாலானஇயற்கைச்சீற்றங்களால் ஒடுக்கப்பட்டவர்கள், ஏழைகள், விவசாயிகள்தான் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். விவசாயிகளை இந்த அரசு எப்படி நடத்துகிறது என்று அனைவருக்கும் தெரியும். நீங்கள் விவசாயிகளின் சுதந்திரம், வாழ்க்கை, உரிமை, கண்ணியம் ஆகியவற்றைப் பறித்துவிட்டீர்கள்.

என். டி. ஏ. அரசு கொண்டு வரும் பெரும்பாலான மசோதாக்களைப் போலவே இந்த மசோதாவும் மாநில உரிமைகளுக்கு எதிரானது. நீங்கள் கூட்டாட்சி கூட்டாட்சி என்று பேசுகிறீர்கள். ஆனால் இது முரண்பாடான கூட்டாட்சியாக இருக்கிறது.

பேரிடர்மேலாண்மைஎன்பதுமாநிலபட்டியலில் வரும் . ஆனால் எந்த ஒரு மாநிலத்தின்ஆலோசனையும்பெறாமல்இந்தமசோதாவை கொண்டு வருவது பேரிடர் மேலாண்மையில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்.

பத்தி 6(1) இல் தொழில் நுட்ப வழிகாட்டு தலை மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு வழங்கும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டுக்குள் மாநில அரசு இருக்க வேண்டும் என்று பொருள்தானே?

இந்த மசோதா தேசிய அளவிலான, மாநிலஅளவிலான பேரிடர்தரவுத்தளத்தை உருவாக்குவதுபற்றிகுறிப்பிடுகிறது. அனைவரும் இதை வரவேற்போம். ஆனால் இந்த தரவுஆய்வுஎன்பது அனைத்துநகரங்களையும், கிராமங்களையும்நிலப்பரப்புகளையும் உள்ளடக்கியதாக இருக்குமா? இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் தாமிரபரணி ஆற்றில் உடைப்பு ஏற்பட்டால், அதன் மூலம் ஆற்றங்கரையில்உள்ளஎந்தெந்தபகுதிகள்பாதிக்கப்படும், எந்தெந்தகுடியிருப்புகள்பாதிக்கப்படும் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

மக்களின் உயிரோடு விளையாடக் கூடாது!

ஒருஆறோ, ஏரியோஉடைப்புஏற்பட்டால் எங்கெங்கே பாதிப்பு ஏற்படும் என்பது தரவுத் தளத்திலே இருக்கவேண்டும். முக்கியமான விஷயம் என்னவென்றால் நீங்கள் இந்த தரவுத்தளத்துக்கானதரவுகளைசேகரித்துஉருவாக்கும்போது, பல சமயங்களில் மாநில அரசுகளால் அவற்றை அணுக முடியவில்லை. இந்த சூழ்நிலை இருக்கக் கூடாது. ஏனென்றால் நாம் மக்களின் உயிரோடு விளையாடக் கூடாது.

கடற்கரை அரிப்பு என்பது முக்கியமான பிரச்சினையாக உள்ளது. தமிழ்நாட்டில் நீண்டகடற்கரைஉள்ளது. அவற்றில்பலபகுதிகள் மண்ணரிப்பால் பாதிக்கப்படுகின்றன. மேலும் நாட்டில் இருக்கும் பல நகரங்கள் கடலில்மூழ்கக்கூடும்என்றமுன்கணிப்புஇருக்கிறது. இதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். பிரிவு 8-பி யில் புதிதாக ஒரு விஷயம் சேர்க்கப்பட்டுள்ளது. பேரிடர் மேலாண்மை குறித்த உயர் மட்டக் குழு அமைக்கப்படும் என்று சொல்கிறீர்கள். அந்த குழு ஒன்றிய அரசின் குழுவாக இருக்கும் இந்த குழுதான் பேரிடரா இல்லையா என்று முடிவு செய்யும்.

எனக்குகவலையாகஇருக்கிறது. ஏனென்றால்இந்தகுழுவுக்குஅப்படிஎந்தஅதிகாரமும் கிடையாது. இது அரசின் கீழ் உள்ளது. அரசின் ஆலோசனைப்படிதான் நடக்கும். அப்படியென்றால் இரட்டை இன்ஜின் கொண்ட மாநிலங்களில் ஏற்படுவதுதான் பேரிடர் என்று ஆகிவிடும். அப்படி இல்லாத, உங்களுக்கு எதிர்க்கட்சிகளாக இருப்பவர்கள் ஆளும்மாநிலங்களில்ஏற்படும்பேரிடர்களை அவர்களாகவே சமாளிக்க வேண்டும் என்றும் ஆகிவிடும்.

நிவாரணத்திற்கு போராட வேண்டியுள்ளது!

இந்த மசோதாவில் பேரிடர் நிவாரணம் என்பதுமாநிலங்களின்நியாயமானஉரிமை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால்தமிழ்நாடு தனக்கு பேரிடர் நிவாரணம் வேண்டி உச்சநீதிமன்றம்வரைபோகவேண்டியிருக்கிறது.

கடந்த வருடம் மிக்ஜாம் புயல் ஏற்பட்ட போது 37 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் கேட்டிருந்தோம். அப்போதுதான்பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை எங்களால் மீட்டெடுக்க முடியும். ஆயிரக்கணக்கான மக்களின் வீடுகள், நிலங்கள் பாதிக்கப்பட்டன. அவர்களுடைய வாழ்க்கையை மறுகட்டமைப்பு செய்வதற்காக 37 ஆயிரம் கோடி ரூபாய் கோரியிருந்தோம். எங்களதுமுதல்வர்அவர்கள்ஒன்றிய அரசிடமும்பிரதமரிடமும்உதவிகோரியிருந்தார். ஆனால் எங்களுக்கு ஒரு ரூபாய் கூட ஒன்றியஅரசுநிவாரணம்வழங்கவில்லை. அதனால்தான் உச்ச நீதிமன்றம் செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம்.

வயநாடுநம்கண்முன்னேஏற்பட்டமோசமான பேரிடர் அது. ஆனால் அதற்கான நிவாரண உதவி ஒன்றிய அரசால் வழங்கப்படவில்லை.

ஏன் மாநில அரசு உச்ச நீதிமன்றத்துக்கு செல்லும் நிலை ஏற்படுகிறது? ஏன் மாநில அரசுஅத்தகையநிலைக்குதள்ளப்படுகிறது? எப்போதெல்லாம் பிரச்சினைகள் ஏற்படுகிறதோ, எப்போதெல்லாம் உதவி தேவைப்படுகிறதோஅப்போதெல்லாம்நாங்கள்நீதிமன்றத்தை நாட வேண்டியுள்ளது.

சரிசமமாக கண்ணியமாக வாழும் உரிமையை அரசியலமைப்பு சட்டத்தின் 14, 21 பிரிவுகள் வழங்குகின்றன. இந்த உரிமை நிவாரணநிதிவழங்கப்படாததால்மறுக்கப்படுகிறது.

மேலும் இந்த மசோதாவில் பல பேரிடர் மேலாண்மை அமைப்புகளை உருவாக்கப் போவதாக கூறப்பட்டுள்ளது. இப்போது பல் வேறுஅமைப்புகள்பேரிடர்தொடர்பாகபணியாற்றுகின்றன. இப்படி இருப்பதால் ஒருவருக்கொருவர் குறை கூறிக் கொள்ளும் நிலைதான் ஏற்படும்..

பேரிடர் மேலாண்மைக்கு தனித் துறை வேண்டும்!

எனவே பேரிடர் மேலாண்மைக்கு ஒரு துறை, ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். பேரிடர் மேலாண்மைக்காக ஒரு தனி அமைச்சகம் உருவாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் எங்கெங்கு எவ்வளவு பேரிடர்கள் ஏற்படுகின்றன என்பதை அவர்கள் கணக்கிட வேண்டும்.

அண்மையில்மேற்குவங்காளமுதல்வர் மம்தாபானர்ஜி Damodar Valley Corporation (DVC) ல் இருந்து அளவுக்கு அதிகமான தண்ணீர் திறந்து விட்டதால்தான் மேற்கு வங்காளம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது என்று குற்றம் சாட்டியிருந்தார். பல்வேறு அமைப்புகள் இதில் ஈடுபட்டால், தெளிவான அதிகார வரம்புநிர்ணயிக்கப்படாவிட்டால்இந்தநிலைதான் ஏற்படும்.

44ஏபிரிவில்மாநிலபேரிடர்ரெஸ்பான்ஸ் ஃபோர்ஸ் ஏற்படுத்துவதாக சொல்லியுள்ளீர்கள். ஆனால்இதற்கானநிதியையார்கொடுப்பதுஎன்பதுதெளிவுபடுத்தப்படவில்லை. தமிழில் ஒரு பழமொழி உள்ளது -

"ஆத்துக்குள்ள நின்னு அரோகரானு சொன்னாலும் சோத்துக்குள்ளதான் இருக்கான் சொக்கநாதன்" என்று. நீங்கள் அந்த அமைப்புக்கு யார் நிதியுதவி செய்வது என்று சொல்லாவிட்டால் அதுவும் மாநில அரசின் தலையில்தான் விழும்.

மேலும், 2014 -2020 கால கட்டத்தில் வெப்பஅலைகளால்இந்தியாவில்5ஆயிரம் பேர்இறந்துவிட்டார்கள். புவிவெப்பமடைதல் காரணமாகஇதுதொடர்ந்துஅதிகரிக்கும்என்றும்அஞ்சப்படுகிறது. ஒன்றியஅரசும்வெப்ப அலையை பேரிடர் என்று அறிவிக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் உயிரிழந்தோருக்கு நிதி!

எங்களது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, வெப்ப அலை பாதிப்பை மாநில பேரிடர் என்று அறிவித்திருக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு 4 லட்சம்வரையில்நிதியுதவிவழங்குகிறது.

எங்களது திராவிட மாடல் ஆட்சியின் பல் வேறுநடவடிக்கைகளைநீங்கள்பின்பற்றும் வகையில் அமைந்துள்ளன. அவற்றோடு இதையும் சேர்த்து நீங்கள் பின்பற்றலாம்.

மாநில பேரிடர் மேலாண்மை நிதிக்கு நிதி ஒதுக்கப்படுவதில்மக்கள்தொகையின்அடிப்படையில் வெயிட்டேஜ் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு போன்ற மக்கள் தொகையை கட்டுப்படுத்தியிருக்கும் மாநிலங்களுக்கு பெரும் பின்னடைவாக இருக்கும். மக்கள்தொகைகட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் எங்களுக்கு இது தண்டனையா? எல்லா விதங்களிலும் தமிழ்நாடு முன்னேறியமாநிலமாகஇருக்கக்கூடியகாரணத்தாலேயே, நாங்கள் தொடர்ந்து நல்லாட்சி செய்து கொண்டிருக்கக் கூடிய காரணத்தாலேயே தொடர்ந்து நாங்கள் வஞ்சிக்கப்படுகிறோம். நன்றாக படித்து நல்ல மார்க் வாங்கும் மாணவரை வகுப்புக்கு வெளியே நில் என்று சொல்வது போலத்தான் இருக்கிறது.

எங்கள் பக்கத்தில் இருக்கும் கேரளாவுக்கும்இதேநிலைமைதான். (அப்போதுஆளுந் தரப்பில் அமர்ந்திருந்த கேரளாவை சேர்ந்த பாஜக அமைச்சர் சுரேஷ் கோபி இரு கைகளையும் உயர்த்திக் காட்டினார். அதைப் பார்த்த கனிமொழி)

ஆமாம்...கையை விரிச்சுட்டாங். தமிழ் நாட்டுக்கும் சரி, கேரளாவுக்கும் சரி ஒன்றிய அரசு எதையும் செய்யாமல் கைய விரிச்சுட்டாங்க என்று கூறினார்.

ரூ.37 ஆயிரம் கோடி கேட்டோம் ஒன்றுமே தரவில்லை!

மேலும் பேரிடர் குறியீட்டிலும் வெளிப்படைத் தன்மை வேண்டும். ஆந்திராவோடு சேர்த்து தமிழ்நாட்டையும் அதிக அபாய முள்ள பகுதியாக ஒன்றிய அரசு அறிவிக்க வேண்டும். ஏனென்றால் நாங்கள் தொடர்ச்சியாக புயலை சந்தித்து வருகிறோம்.

தமிழ்நாட்டில் 2015-16 வெள்ளம் ஏற்பட்டபோது25ஆயிரம்கோடிரூபாய்கேட்டோம். ஆனால் ஒன்றிய அரசு கொடுத்தது 1737 கோடி ரூபாய்.

வறட்சி காரணமாக 39 ஆயிரத்து 565 கோடி ரூபாய் கேட்டோம். ஆனால் ஒன்றிய அரசு கொடுத்தது 1748 கோடி ரூபாய்தான்.

வர்தா புயல் தமிழ்நாட்டைத் தாக்கிய போது நாங்கள் கேட்ட நிவாரணத் தொகை 22 ஆயிரத்து 573 கோடி. ஆனால் ஒன்றிய அரசு கொடுத்தது வெறும் 266 கோடி ரூபாய் தான்.

ஒக்கி புயல்நம்மைதாக்கியபோது 9 ஆயிரத்து302கோடிரூபாய்கேட்டோம். ஆனால் 133 கோடிதான் கிடைத்தது.

கஜாபுயல்தமிழ்நாட்டைத்தாக்கியபோது தமிழ்நாடு சார்பில் 17 ஆயிரத்து 899 கோடி ரூபாய் கேட்டோம். அப்போது ஒன்றிய அரசு கொடுத்தது 1144 கோடி ரூபாய்தான்.

நிவார் புயல் தாக்கியபோது 3 ஆயிரத்து 758 கோடி ரூபாய் கேட்டோம். ஆனால் கிடைத்தது வெறும் 63 கோடி ரூபாய்தான்.

கடந்தஆண்டுகடுமையானமழைவெள்ளத்தால் தமிழ்நாடு பாதிக்கப்பட்டபோதும் எங்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை. எனது சொந்தத் தொகுதியான தூத்துக்குடி மிக மோசமாக பாதிக்கப்பட்டது. ஆனால் எந்த உதவியும் இல்லை. 37 ஆயிரம் கோடி ரூபாய் வெள்ள பாதிப்புக்காக கேட்டோம். ஒன்றும்வழங்கப்படவில்லை. தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

இப்போது தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஃபெஞ்சல்புயலுக்காகதமிழ்நாடுஅரசு ஆரம்பகட்ட உதவியாக 2 ஆயிரம் கோடி ரூபாய் கேட்டோம். மத்திய குழுவினர் வந்தபோது அவர்களிடம்6ஆயிரத்து675கோடிரூபாய்உதவி கேட்டோம். ஆனால் ஒன்றும் கிடைக்கவில்லை.

நிதி சுயாட்சியை இழந்துள்ளோம்!

இந்நிலையில் ஒன்றிய அரசு 944 கோடி ரூபாய் விடுவிக்கப்படுவதாக அறிவித்தது. இதை வெள்ள நிவாரண நிதி என்று சத்தம் போட்டுசொன்னது. ஆனால் உண்மையில் என்னவென்றால், எஸ்டிஆர்எஃப் நிதியின் கீழ் மாநில அரசுக்கு செலுத்த வேண்டிய பணம்தான் அது. தேசிய பேரிடர் நிதியில் இருந்து நீங்கள் எந்த பணமும் வழங்கவில்லை.

ஆனால்மாநிலங்களில்விவசாயிகளுக்கு ஏற்படுகிற துயரம், வீடிழந்த மக்கள் எல்லாவற்றுக்கும் மாநில அரசே பொறுப்பேற்க வேண்டியதாகஇருக்கிறது. ஆனால்நீங்கள் ஒரே நாடு என்று எளிதாக அழைக்கிறீர்கள்

ஜிஎஸ்டி இழப்பீட்டில் தமிழ்நாடு 20 ஆயிரம் கோடி ரூபாயை இழந்திருக்கிறது. எங்களது நிதி சுயாட்சியை இழந்திருக்கிறோம்.

விவசாயிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை இழந்து, அதிலிருக்கக்கூடிய பயிர்கள்அழுகிகண்ணீரும்கம்பளையுமாக கடனோடுநின்றுகொண்டிருக்கிறார்கள். வீடுகள் சிதைந்து உடைந்துபோய் தன் பிள்ளைகளோடு தெருக்களில் மக்கள் நின்று கொண்டிருக்கிறார்கள்.

இப்படி ஒரு நிலைமையில் இங்கு இருக்கக்கூடியஒன்றியஅரசுஒருரூபாய்கூடதமிழ்நாடுஅரசுக்குதராமல்இப்படிகல்நெஞ்சோடு நடந்துகொள்வது என்பது ஏற்றுக் கொள்ள முடியாது. இது தொடர்ந்து தமிழக மக்களை வஞ்சித்துக் கொண்டே இருக்கக்கூடிய ஒரு நிலையிலே நிச்சயமாக விரைவில் தக்க பாடம் சொல்லித் தரப்படும்!"

இவ்வாறுகனிமொழிகருணாநிதிஉரையாற்றினார்.

விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் செங்குளம் கண்மாயில் தூர்வாரும் பணிகளை நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், ஆணையாளர் கிருஷ்ணமூர்த்தி, தி.மு.க. மாநகர செயலாளர் எஸ்.ஏ. உதயசூரியன், ஹட்சன் நிறுவன உரிமையாளர் சந்திரமோகன், தொழில் அதிபர் அபிரூபன் மற்றும் பசுமை மன்ற நிர்வாகிகள், தி.மு.க.மாநகர பகுதி கழக செயலாளர்கள் அ.செல்வம், காளிராஜன், கருணாநிதி பாண்டியன், மாவட்ட கழக துணை செயலாளர் ராம்மூர்த்தி, மாநகராட்சி மண்டல குழுத்தலைவர் கவுன்சிலர் குருசாமி, மாவட்ட பிரதிநிதி ராஜேஷ் மற்றும் தி.மு.க. கவுன்சிலர்கள் இருந்தனர்.